



# யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

## நிறுவுநர் நினைவுநாள்
## பரிசளிப்பு விழா

# அதிபர் அறிக்கை

**- 2011 -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
"செய்கையே சிறந்த கல்வி"

# யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் 2011

இடம் :- பாடசாலை மண்டபம்
காலம் :- 05.11.2011 சனிக்கிழமை காலை 9.00 மணி

**தலைமை**

திரு. கு. விமலன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**

**பேராசிரியர் க. தேவராஜா**

(சிரேஷ்ட விரிவுரையாளர், முகாமைத்துவபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**திருமதி இலட்சுமி தேவராஜா**

**சிறப்பு விருந்தினர்**

**திரு. சி. கந்தசாமி**

(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

**நினைவுப்பேருரை**

**கலாநிதி செ. திருநாவுக்கரசு**

(விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் அறிக்கை - 2011

மனதிற்கு இதமான இந்த இனிய காலை வேளையில் எண்பத்தியிரண்டு ஆண்டுகளைக் கடந்து உயர்ந்து நிற்கும் எம் கல்லூரி அன்னையின் பாதங்களை வணங்கி நிறுவுநர் திருமிகு ப.செகராசசிங்கம் அவர்களின் கல்விப்பணியினைப் போற்றிப் பணிகிறேன். இன்றைய பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராக வருகை தந்து எம்மை எல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவதுறைப் பேராசிரியர் க.தேவராஜா அவர்களே! பரிசில்களை வழங்கி கௌரவிக்க வந்திருக்கும் திருமதி. இ.தேவராஜா அவர்களே! சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி அவர்களே! நிறுவுநர் நினைவுப் பேருரையாற்ற வந்திருக்கும் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களே! எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபருமான திரு ச.சிவநேஸ்வரன் அவர்களே! எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதைய சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் அதிபருமான திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களே! சகோதரப் பாடசாலை அதிபர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! அபிவிருத்திச் சங்க செயலாளர் அவர்களே! மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! நலன் விரும்பிகளே! இளைப்பாறிய ஆசிரியர்களே! முன்னாள் ஆசிரியர்களே! கல்லூரியின் ஆசிரியப் பெருமக்களே! எனது மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அழைப்பிற்கிணங்க பிரதம விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் ஈழத்தமிழ் மக்களின் உயரிய கல்விக் களமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட சிரேஸ்ட விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றார். முகாமைத்துவதுறைப் பேராசிரியராகிய இவர் தாவடிக் கிராமத்தை பிறப்பிடமாகவும் இணுவில் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயம் மிக்க ஆசிரியராகவும் சமூகம் போற்றும் சமூக சேவையளராகவும் திகழ்பவர். ஆரம்பக்கல்வியை தாவடி இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று விரிவுரையாளரானார். இவர் தனது பொன்விழா மற்றும் மணிவிழாக்களைக் கண்டு மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை பெற்றுத் திகழ்பவர். இவரது பிறந்த தினத்தன்று வருடந்தோறும் இணுவில் கிராமத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்வோருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நடைமுறை காணப்படுகிறது. இவ்வகைச் சிறப்புக்கள் வாய்ந்த பேராசிரியர் அவர்கள் இன்று இங்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பதும் அவரது பாரியார் திருமதி.இலட்சுமி தேவராஜா அவர்களின் வருகையும் எமக்கு பெரும் மகிழ்வையும் சிறப்பையும் தருகின்றது. அவர்களை அன்போடு வரவேற்கின்றேன்.

எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி அவர்களே! சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டுள்ள தாங்கள் எங்கள் கல்லூரி மீது மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர். எமக்குத் தேவையான வழிகாட்டல்களை காலத்திற்குக் காலம் வழங்கி வழிப்படுத்தும் தங்களை அகம் மகிழ்ந்து வரவேற்கின்றேன்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்த வந்துள்ள கலாநிதி. செ.திருநாவுக்கரசு அவர்கள், ஆசிரியர்களை வினைத்திறனுடன் தரமான சேவையினை ஆற்றுவதற்கு பயிற்சி அளிக்கும் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக திகழ்கின்றார். இன்று கல்வி உலகில் அறிவுநிறைந்த பொக்கிஷமாக காணப்படுகின்றார். சுயமுயற்சியின் மூலம் தன்னை வளர்த்துக் கொண்ட கல்விமான். மாணவர்களுக்கு பயன் தரத்தக்க பல நூல்களையும் தமிழ் ஆய்வு நூல்களையும் படைத்துள்ளார். எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்ற இருப்பதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். தங்களை நாம் பெருமகிழ்வுடன் வரவேற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரப்பாடசாலை அதிபர்களே, கல்லூரியின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே உங்கள் அனைவரதும் வருகையானது எமக்கு பேருவகையைத் தருகின்றது. உங்கள் அனைவரையும் பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருடனும் இணைந்து வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் உயர்ந்த செயற்பாடுகளாலும் ஊக்கத்தினாலும் பல்துறை வளர்ச்சி பெற்றுவரும் கல்லூரியின் பரிசுநாள் அறிக்கையினை மனமகிழ்வுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

**மனமகிழ்வு தரும் மாணவச் செல்வங்கள்**

சண்டிலிப்பாய் இந்துத் தாய் தன்னகத்தே சுமக்கும் மாணவச் செல்வங்களை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இது எமது ஆளுமைமிக்க ஆசிரியர்களின் செயற்பாட்டின் நம்பிக்கையாகவே நான் கருதுகின்றேன். எம்மைப் பொறுத்தளவில் பௌதீக வளம், வகுப்பறைப் பற்றாக்குறை, ஆசிரிய வளங்களின் பற்றாக்குறை ஆகியவற்றின் வெளிப்பாடாக எம்மை நாடிவரும் மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

தற்போது மாணவர் எண்ணிக்கையானது தரம் 01 முதல் 05 வரை 425 மாணவர்களும், தரம் 06 முதல் 11 வரை 592 மாணவர்களும் தரம் 12 முதல் 13 வரை 184 மாணவர்களும் கல்வி கற்கின்றனர்.

எமது மாணவர்களின் பெற்றோர்களில் அதிகமானவர்கள் நிரந்தரத் தொழிலும் பொருளாதார வலுவுமற்றவர்கள். எனினும் தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களாக அவர்கள் இருப்பது எமது ஆசிரியர்களின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக உள்ளது.

**உயர் சேவை நல்கும் ஆசிரியர்கள்**

மாணவர்களின் உயர்வில் உன்னத இன்பம் காணும் உயர் சேவை நல்கும் ஆசிரியர்களை நாம் கொண்டிருப்பதை மாணவர்களின் சகல துறை அடைவுமட்டங்கள் வெளிக்காட்டுகின்றன. தற்போது 53 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் தற்காலிக இணைப்பில் திரு.ந.சத்தியரூபன், திரு.ப.கமிலஸ், திருமதி.க.ஸ்கந்தரூபன் ஆகியோர் எம்முடன் கடமையாற்றுகின்றனர்.

திருமதி.ல.கிருஸ்ணமூர்த்தி, செல்வி.நா.சாயுமதி, செல்வி ஜெ.வாரதி திரு.கு.கிரிசாந், திரு.க.குகநேசன், திரு.எஸ்.சூரியதாசன், செல்வி.ஜீன்மறீடா அகஸ்ரீன் யோசப் ஆகியோர் குறைந்த வேதனத்தில் நிறைந்த சேவையினை வழங்கும் தொண்டராசிரியர் களாவர்.

நிரந்தர இடமாற்றம் பெற்று திருமதி.தி.யோகானந்தம், திருமதி.சி.ஜெயக்குமார், திருமதி.த.ஸ்ரீரங்கநாதன் திருமதி த.சிவயோகராசா, செல்வி.சி.சிவரஞ்சினி திருமதி.யோ.சுரேஸ்குமார் ஆகியோரும் எம்முடன் பணியாற்றுகின்றனர். எமது கல்லூரியின் களநிலைக்கேற்ப தம் பணியை சிறப்பாக வழங்க இவர்கள் முன் வந்துள்ளனர். இவர்களை மனமகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

இதேவேளை தமது உச்ச சேவையை வழங்கி கல்லூரியின் உயர்வில் தம்மை ஈடுபடுத்தி அரும்பணி புரிந்த செல்வி த.ரேவதி, திருமதி க.சபாரட்ணம், திருமதி.க.குகதாசன், திரு.கா.ரமணன், செல்வி.சி.சிவரஞ்சினி ஆகிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். அத்துடன் திருமதி.ம.விக்னராஜா அவர்கள் வடமாகாணத்திற்கு அழகியல்துறை வளவாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அளப்பரிய ஆசிரியப்பணி செய்த இவர்களின் பிரிவில் கல்லூரித்தாய் துயருற்றாள். ஆயினும் தன்னை தேற்றி சென்ற இடத்தில் அவர்கள் சிறப்புற வேண்டும் என வாழ்த்துகின்றாள்.

அலுவலகக் கடமைகளிற்காக எந்த உத்தியோகத்தர்களும் இல்லாத நிலையில் மிகப் பாரிய வேலைகளை எல்லாம் தமது வகுப்பறைக் கடமைகளோடு மனம் கோணாது உரிய காலத்தில் அர்ப்பணிப்புணர்வோடு நிறைவேற்றி வருகின்ற திருமதி.சா.ஜெயராஜன், திருமதி.வி.செல்வகுமார், செல்வி.அ.லதாஜினி, செல்வி.கு.விமலினி, திருமதி.ச.மகேஸ்வரன் ஆகியோர் எனது பெரும்பாராட்டுக்குரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத் தேர்வுகள்

### புலமைப்பரிசில் பரீட்சை

எமது கல்லூரியின் பாடவிதான அடைவுமட்டமானது தொடர்ச்சியாக உயர்வடைந்து வருகின்றது. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் உள்ளக வெளியக மேற்பார்வைகள், பெற்றோர் மாணவர்களின் முழுமையான ஈடுபாடுகளுமே இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன.

இப் பரீட்சையில் சில வருடங்களாக சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்த போதும் இவ்வாண்டு அதில் சிறிது தளர்வு ஏற்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும் ஆசிரியர்களின் திடீர் இடமாற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மையே. இருந்த போதிலும் இதில் இருந்து மீண்டு வருவோம் என உறுதி கூறுகின்றேன்.


| ஆண்டு | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 07 | 10 | 05 |
| 100புள்ளிக்கு மேல் எடுத்த மாணவர்களின் எண்ணிக்கை | 37 | 31 | 31 |
| அரச உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை | 07 | 10 | 05 |

இம்மாணவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்களான திரு.க.ஶ்ரீநந்தகோபன் (பகுதித்தலைவர்), திரு.த.அருளரசன், திருமதி.சு.அனுஜெயன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். சென்ற ஆண்டு சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் விழாவில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜெயலக்ஷ்மி இராசநாயகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இவ்விழாவானது ஆசிரியர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. அதிக புள்ளி பெற்ற மாணவி செல்வி.ர.அகிலா அவர்களிற்கு ஆசிரியர்களால் துவிச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை புள்ளிப்பகுப்பாய்வு
## 2009, 2010, 2011





### க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் 60.5% சித்தி பெறப்பட்டது. தோற்றியோர் 76 பேர் உயர்தரம் கற்கத் தகுதிபெற்றோர் 46 பேர். செல்வி.சர்மிளி விக்கினராசா, செல்வி. யுலக்சினி கிருஸ்ணமூர்த்தி ஆகிய இரு மாணவர்கள் 9 பாடங்களிலும் "A"தரச் சித்தியை பெற்றனர். இது முதன்முறையாக எமது க்ல்லூரி நிகழ்த்திய சாதனையாகும். சிறந்த பெறுபேறு பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. (சா.த.) புள்ளிப்பகுப்பாய்வு 2010





## க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்

எமது பாடசாலையில் 2010ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 63 மாணவர்கள் தோற்றி 40 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியினைப் பெற்றுள்ளனர். பெறப்பட்ட சித்திவீதமானது 63% ஆகக் காணப்படுகின்றது. இப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இணைப்பாட விதான செயற்பாடுகளில்**

மாணவரின் ஆளுமையை விருத்தி செய்வதில் கல்வி சார் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது கல்லூரி துரிதமான வளர்ச்சி பெற்று வருகின்றது.

தமிழ்மொழித்தினப் போட்டிகளில் தமிழ்த்தினக்குழுவானது மாணவர்களைப் பயிற்றுவித்து சிறந்த வெற்றிகளைப்பெற உழைத்து வருகின்றது.

**தமிழ்த்தினக்குழு ஆசிரியர்கள்**

1. திரு.இ.ஆனந்தநடராசா
2. திருமதி.ய.ஸ்ரீகுமரன்
3. திருமதி.ச.பாலசுந்தரம்
4. திரு.ந.குகபரன்
5. திருமதி.ஹே.சாந்தகுமார்
6. திருமதி.தி.ஜெயபாலன்
7. திருமதி.ம.குணராஜா
8. திரு.த.நித்தியானந்தன்
9. திருமதி.ம.விக்னராஜா
10. செல்வி.செ.செல்வராணி
11. திரு.க.ஸ்ரீநந்தகோபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் வைரவிழாவிற்காக நடாத்தப்பட்ட தேசிய ரீதியான பேச்சுப் போட்டியில் பிரிவு 5ல் செல்வன் லோ. கமில்டன் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

செல்வி.ந.துஷாந்தி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் 2ம் முறையாக 1ம் இடத்தைப் பெற்று ரூபா 10000 பணப் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

**தமிழ்த் தினப் போட்டி**

| நிகழ்ச்சிகள் | பிரிவு | பெயர் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|
| வாசிப்பு | 2 | க.அபர்ணா | 2ம் இடம் | |
| கட்டுரை வரைதல் | 3 | ச.சிந்துஜா | 2ம் இடம் | |
| கட்டுரை வரைதல் | 5 | ந.துஷாந்தி | 2ம் இடம் | |
| இலக்கணப்போட்டி | 3 | ந.தர்சனா | 1ம் இடம் | |
| குறுநாடக ஆக்கம் | 4 | யோ.எழிலன் | 1ம் இடம் | |
| குறுநாடக ஆக்கம் | 5 | சி.சோபனா | 2ம் இடம் | |
| கவிதை ஆக்கம் | 4 | ட.சுகன்ஜா | 2ம் இடம் | |
| பேச்சு | 5 | ம.கார்த்திகா | 3ம் இடம் | |
| பாவோதல் | 2 | சி.கீர்த்தனா | 2ம் இடம் | |
| பாவோதல் | 5 | நா.ஜெயந்தினி | 3ம் இடம் | |
| இசை தனி | 2 | ஜெ.யதுஷிகா | 2ம் இடம் | |
| இசை தனி | 4 | வி.சர்மிளி | 3ம் இடம் | |
| இசை தனி | 5 | ப.கௌதமி | 3ம் இடம் | |
| நடனம் தனி | 5 | ட.சிந்துஜா | 3ம் இடம் | |
| இசை குழு | | | 1ம் இடம் | 2ம்இடம் |
| தமிழ்அறிவு வினாவிடை (திறந்த போட்டி) | | | 3ம் இடம் | |
| விவாதம் (திறந்த போட்டி) | | | 1ம் இடம் | 2ம்இடம் |
| சிந்துநடைக்கூத்து | | | | 2ம்இடம் |

ஆங்கில தினப்போட்டிகளில் பல மாணவர்கள் ஆர்வமுடன் பங்குபற்றி கோட்ட, வலய மட்டங்களில் வெற்றிகளை பெற்றுள்ளனர். இவர்களை வழிப்படுத்திய திரு.ந.ஹரிகரன், செல்வி தெ.ரேணுகா, செல்வி பா.யாமினி, செல்வி சு.யசோதரா, திருமதி.ட.உதயகுமார், செல்வி.கு.விமலினி ஆகியோரையும் மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்**

| Programmes | Divisional level | Zonal level |
|---|---|---|
| Junior Drama(Grade 8) | 1st place | 3rd place |
| Copy writing (Grade 10) - Miss.K.Nitharsika | 1st place | 2nd place |
| Role play(Grade 9) | 1st place | 2nd place |

கணித விஞ்ஞானப் போட்டிகளிற்கு மாணவர்களை நெறிப்படுத்தும் திரு.க.சிவசங்கர், திரு.ந.ரவிவண்ணன், செல்வி.து.நடராசா, திருமதி.சு.ரமேஷ், திருமதி.ந.நாகேஸ்வரன், திருமதி.அ.முகுந்தன், திரு.கு.தயாபரன் ஆகியோரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

**விஞ்ஞானப்போட்டி முடிவுகள்**

| நிகழ்ச்சிகள் | தரம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| வினாடிவினா – | | | | |
| அ.சுகன்ஜா | 6 | 2ம் இடம் | 2ம்இடம் | |
| க.அபர்ணா | 7 | 2ம் இடம் | | |
| ர.கிருத்திகா | 7 | 3ம் இடம் | 3ம்இடம் | |
| ம.நிவேனிகா | 9 | 4ம் இடம் | | |
| இ.பதுசன் | 9 | 5ம் இடம் | | |

சமூக விஞ்ஞானப் போட்டியில் மாணவர்கள் பலர் கோட்டமட்டங்களில் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி.ச.சிவானந்தன், திருமதி. ச.நாகராசா, திரு.செ.சுதாகரன், செல்வி.கு.விமலினி, செல்வி.சி.வசந்தி, திரு.த.நித்தியானந்தன் ஆகியோரை பாராட்டுகின்றேன்.

வணிகப் போட்டிகளிற்கு மாணவர்களை வழிப்படுத்தும் திருமதி.வி.செல்வகுமார், திருமதி.தி.ஜெயபாலன், திரு.செ.சுதாகரன், திருமதி. த. ஸ்ரீரங்கநாதன், ஆகியோரையும்

மனையியல் போட்டிகளுக்கு பொறுப்பாக இருந்து மாணவர்களை வழிப்படுத்தும் திருமதி.மே.பு.பொன்கலன் ஆசிரியரையும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் போட்டிகளிற்கு பொறுப்பாக இருந்து தயார்ப்படுத்தும் சகல ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுத்துறை

**பெருவிளையாட்டுக்கள்**

எங்கள் கல்லூரியானது வழமை போல் தொடர்ச்சியாக விளையாட்டுத் துறையில் வளர்ச்சி பெற்று வருகின்றது. எங்கள் மாணவர்கள் விளையாட்டுக்களில் தங்களின் திறமைகளை கடந்த வருடம் போல இம்முறையும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என பல்வேறு மட்டங்களில் பல போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறார்கள்.

பெருவிளையாட்டுக்களில் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் போன்றவற்றில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி மெய்வல்லுநர் துறையிலும் மாணவர்கள் முத்திரை பதித்துள்ளார்கள். செல்வி.த.சங்கீதா மாகாண மட்டத்தில் முதன்மை வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். உள்ளக விளையாட்டிலும் மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள்.

இவர்களின் இவ்வெற்றிக்கு இவர்களை வழிப்படுத்திய விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், உடற்கல்வி ஆசிரியர், பொறுப்பாசிரியர்கள், ஊக்கமளித்த ஏனைய ஆசிரியர்கள் அனைவரிற்கும் எனது பாராட்டுதல்கள். தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மாணவர்கள், ஆசிரியர்களிடம் வேண்டி நிற்கின்றேன்.

**மெய்வல்லுநர் போட்டி**

கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளை எமது கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

செல்வி.த.சங்கீதா மாகாண மட்டத்தில் நீளம் பாய்தல், ஈட்டி எறிதல் ஆகிய நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தையும் உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும் பெற்று மாகாணமட்ட 15 வயதின் கீழ்ப்பிரிவில் முதன்மை வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின் வாண்மை விருத்தி

கல்லூரியின் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணிகளுடன் தமது தொழில் வாண்மைகளை வளர்த்தெடுத்துச் செல்கின்றனர். கல்வித்தர மேம்பாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் பல்வேறு வகையான வாண்மை அபிவிருத்தித் திட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

எமது பிரதி அதிபர் திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் தமிழ்ப்பாட முதுமாணிப் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

எமது ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் திரு.க.ஸ்ரீநந்தகோபன் அவர்கள் பண்பாட்டியல் முதுமாணிப் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

திரு.செ.சுதாகரன், திரு.பொ.தயாளன், செல்வி.கு.விமலினி, செல்வி.செ.செல்வராணி ஆகியோர் பட்டபின் கல்வி டிப்ளோமா நெறியினை பயில்கின்றனர். மேலும் திரு.இ.கண்ணா அவர்கள் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா நெறியினைப் பயில்கின்றார். இவர்கள் உயர்வான பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றேன்.

## மாணவ மன்றங்கள்

மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதிலும் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதிலும் எமது பண்பாடு, கலாசார விழுமியங்களைப் பேணவும் பல மன்றங்கள் எமது கல்லூரியில் செயற்பட்டு வருகின்றன.

உயர்தர மாணவ மன்றம் உயர்தர மாணவர்களின் ஆற்றல்களையும் பன்முக ஆளுமையையும் வளர்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. இதன் தலைவராக செல்வன்.ச.பிரதாப், செயலாளராக செல்வி.கெ.ஆன்டொலீனா, பொருளாளராக செல்வன்.க.வினோத் ஆகியோர் சிறப்பாக செயற்படுகின்றனர். திருமதி.ஹே.சாந்தகுமார், திரு.ந.குகபரன், திரு.ந.சத்தியரூபன், திருமதி.வி.செல்வகுமார், செல்வி.பா.யாமினி, திரு.ந.ஹரிஹரன், திருமதி.த.சிறீரங்கநாதன் ஆகியோர் இதன் பொறுப்பாசிரியர்களாக உள்ளனர். இம்மன்றம் வருடாவருடம் ஒன்றுகூடலை மிகவும் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இம்முறை ஒன்றுகூடல் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய மக்கள் வங்கி உதவி முகாமையாளர் திரு.நா.நாகேஸ்வரனும் சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தினராக எமது வலயக்கல்வி அலுவலகக் கணக்காளர் திருமதி.த.ஆனந்தகிருஷ்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்துமாமன்றம் செல்வன்.ம.டினோசன் தலைவராகவும், செல்வன்.ச.சயோறன் செயலாளராகவும், செல்வி.க.சுகன்யா பொருளாளராகவும் கொண்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. திருமதி.ச.பாலசுந்தரம், திரு.த.அருளரசன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நற்சிந்தனை வழங்கல், சமயகுரவர் குருபூசைத்தினம், நவராத்திரி, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு மற்றும் ஏனைய சமய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தமிழ் மன்றம் செல்வன்.கெ.கிரிசாந் தலைவராகவும், செல்வி. சி.ஜெயரூபினி செயலாளராகவும் செல்வன்.ந.புரந்தகன் பொருளாளராகவும் கொண்டு இயங்கி வருகின்றது. இது திரு.ந.குகபரன், திருமதி.ம.குணராஜா, திரு.த.நித்தியானந்தன் ஆகிய ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் சிறப்பாக இயங்கி வருகின்றது.

கணித, விஞ்ஞானமன்றம் திருமதி.ந.நாகேஸ்வரன், திருமதி. அ.முகுந்தன், திரு.கு.தயாபரன், திரு.க.சிவசங்கர், திருமதி.சு.ரமேஷ், செல்வி.ந.துளபமணி திரு.ந.ரவிவண்ணன் ஆகியோரின் பொறுப்பில் சிறப்பாக இயங்கி வருகிறது. இதன் தலைவராக செல்வன் ப.விதுர்ஷன், செயலாளராக செல்வன்.ச.லவன், பொருளாளராக செல்வி. சி.கொலன்சிகா ஆகியோர் செயற்படுகின்றனர்.

சமூகவியல் மன்றத்தின் தலைவராக செல்வன்.க.சுகிதரன், செயலாளராக செல்வன்.சி.டிலுக்ஷன், பொருளாளராக செல்வி. மு.துவாரகா ஆகியோர் செயற்படுகின்றனர். திருமதி.ச.சிவானந்தன், திருமதி.ச.நாகராசா, செல்வி.கு.விமலினி, செல்வி.சி.வசந்தி ஆகியோர் மாணவர்களை வழிநடத்தி வருகின்றனர்.

ஆங்கில மன்றம் திரு.ந.ஹரிகரன், செல்வி.பா.யாமினி, செல்வி.தெ.ரேணுகா செல்வி.சு.யசோதரா, திருமதி.ட.உதயகுமார், செல்வி.கு.விமலினி ஆகியோரின் பொறுப்பில் ஆங்கில மன்றம் சிறப்பாக செயற்படுகின்றது. தலைவராக செல்வி.வி.சர்மிளி, செயலாளராக செல்வன்.லோ.கமில்டன், பொருளாளராக செல்வி. இ.தனுஷா ஆகியோரும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

வணிகமன்றம் திரு.செ.சுதாகரன், திருமதி.வி.செல்வகுமார், திருமதி.தி.ஜெயபாலன், திருமதி.த.சிறீரங்கநாதன் ஆகிய ஆசிரியர் களின் வழிகாட்டலில் சிறப்பாக இயங்கி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்பிரிவு மன்றம் திருமதி.மே.சேவியர், திருமதி. ச.மகேஸ்வரன், திருமதி.ல.கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஆசிரியர்களின் வழிகாட்டலில் இயங்கி வருகின்றது. இம்மன்றம் செல்வன்.ர. சிலோஜன் தலைமையில் செல்வி.சி.றெக்சிகா செயலாளராகவும் செல்வன்.ர.வுசைன் பொருளாளராகவும் கொண்டு கலைநிகழ்வுகள் மற்றும் சிறுவர் ஆக்கங்கள் போன்றவற்றைச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

சுகாதாரக்கழகம் செல்வன்.கு.சுமன் அவர்களின் தலைமையில் செல்வன்.ச.சயோரன் செயலாளராகவும் ஈ.சுதர்சன் பொருளாளராகவும் கொண்டு திரு.இ.கண்ணா, திருமதி.தி.ஜெயபாலன், திருமதி.மே.பு. பொன்கலன், திருமதி.ந.பிரதீபன், செல்வி.ந.துளபமணி ஆகியோர்களின் வழிநடத்தலில் சிரமதானங்கள், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள், கிராமங்களில் விழிப்புணர்ச்சி, சுகாதாரக்கண்காட்சி, பாடசாலையின் தூய்மையைப் பேணல், மாணவர்களின் உடல்,உள, ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நடவடிக்கை, மாணவர்களிடையே ஏற்படும் குறைபாடு, போசாக்கு குறைபாட்டு நோய்கள் போன்றவற்றை கட்டுப்படுத்தல், கருத்தரங்கு விழிப்புணர்வுக் கூட்டங்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

**நூலகம்**

செல்வி.கு.விமலினி அவர்களை நூலகராகக் கொண்டு கல்லூரி நூலகம் இயங்குகின்றது. நிரந்தரமான ஓர் கட்டடம் இல்லாத நிலையிலும் மாணவர்களின் ஆசிரியர்களின் அறிவுப் பசிக்கு நூலகம் சிறப்பாகச் செயற்படுகின்றது. இவ்வாண்டும் குறிப்பிடத்தக்க தொகைக்கு, பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன் பிறந்த நாள் கொண்டாடும் மாணவர்கள் அன்பளிப்பாகவும் நூல்களை வழங்கி வருகின்றமை சிறப்பானதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலைத்தேய வாத்தியக்குழு**

கல்லூரியில் நடைபெறும் விழாக்களில் சிறப்பான வரவேற்பினை வழங்க இக்குழு தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. திருமதி.ய.ஸ்ரீகுமரன், திருமதி.ம.விக்னராஜா, திரு.த.நித்தியானந்தன், திரு.இ.கண்ணா, செல்வி.சு.யசோதரா ஆகியோரின் நெறிப்படுத்தலில் வாத்தியக்குழு இயங்குகின்றது.

**சாரணியம்**

திரு.த.அருளரசன் திரு.பொ.தயாளன் ஆகியோரின் நெறிப் படுத்தலில் சாரணிய இயக்கம் சிறப்பாகத் தொழிற்படுகின்றது. கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளிலும் ஆலயங்களின் உற்சவ காலங்களிலும் இவர்கள் ஆற்றும் சேவை பாராட்டுக்குரியதாகும். சாரணர்களிடையே நடைபெறும் பல்வேறு போட்டிகளில் எமது சாரண மாணவர்கள் பங்கு பற்றி பல வெற்றிகளைப் பெற்றுக் கொண்டனர்.

செல்வி.தெ.ரேணுகா திருமதி.ந.பிரதீபன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் பெண் குருளைச் சாரணிய இயக்கம் சிறப்பாகத் தொழிற்படுகின்றது. பெண் குருளைச் சாரணர்களிடையே நடைபெறும் பல்வேறு போட்டிகளில் எமது பெண் குருளைச் சாரண மாணவர்கள் பங்கு பற்றி பல வெற்றிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**வங்கிச்செயற்பாடு**

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக் கிளையினரால் எமது பாடசாலையில் 2008 ஆனி மாதம் சிங்கிதி சிறுவர் சேமிப்பு அலகு ஆரம்பிக்கப்பட்டு வெகு சிறப்பாக இயங்கி வருகின்றது. இதன் மாணவ முகாமையாளர்களாக க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கு பொறுப்பாசிரியர் களாக திருமதி.வி.செல்வகுமார், திரு.த.சிறீரங்கநாதன் ஆகியோர் உள்ளார்கள். இதனைவிட மக்கள் வங்கி, சம்பத்வங்கியின் சிறுவர் சேமிப்பு அலகுகளும் இயங்கி வருகின்றன. மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்திற்கு ஓர் உந்துசக்தியாக இச் செயற்பாடு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவ முதல்வர்கள்**

எமது கல்லூரியின் மாணவ முதல்வர்கள் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து எல்லா நிகழ்ச்சிகளிலும் தமது முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். சிரேஷ்ட மாணவ முதல்வர்களாக செல்வன். இ.விதுசன், செல்வி.ற.மிஜிதாநிதி, உதவி சிரேஷ்ட மாணவ முதல்வர்களாக செல்வன். க.வினோத், செல்வன். கெ.கிரிசாந், செல்வி.த.கஜேந்தினி, செல்வி.இ.கிரிஜா ஆகியோர்கள் செயற்படுகின்றனர். திரு.ந.குகபரன், திரு.ந.ஹரிகரன், திரு.க.சிவசங்கர், திரு.க.ஸ்ரீநந்தகோபன், திருமதி.ச.சிவானந்தன், திருமதி.வி. செல்வகுமார் ஆகியோர் பொறுப்பாசிரியர்களாக இருந்து மாணவ முதல்வர்களை வழிப்படுத்துகின்றனர். கல்லூரியின் செயற்பாடுகளில் இவர்கள் பணி காத்திரமானது.

**கணனிக்கூடம்**

எமது மாணவர்களில் அதிகமானவர்கள் இன்றைய நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் கல்லூரியின் கணனிக்கூடம் உதவுகின்றது. திருமதி.ட.உதயகுமார் செல்வி. அ.லதாஜினி ஆகியோர் மாணவர்களிற்கு கற்பிக்கின்றனர். நிறைவான கணனி அறிவைப் பெற எமது கணனிக்கூடம் மேலும் விஸ்தரிக்கப்படட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமாகும்.

**கட்புல செவிப்புல கூடம்**

இன்றைய கல்விச் செயற்பாட்டில் நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. எமது ஆசிரியர்களும் மாணவர்களும் இதனைப் பயன்படுத்தி தமது செயற்பாடுகளில் நிறைவு காண்கின்றனர். இதன் பொறுப்பாசிரியர் களாக திரு.பொ.தயாளன், திரு.ந.ஹரிகரன், ஆகியோர்கள் செயற்படுகின்றனர்.

**ஆசிரியர்கள் நலன்புரிக்கழகம்**

இக்கழகம் கல்லூரியில் நடைபெறும் சகல விழாக்களிலும் தமது பங்குபற்றுதலை வழங்கி வருகின்றது. மாணவர்களின் நலனோம்பலிலும், ஆசிரியர்கள், கல்வி சாரா அலுவலர்களின் குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதில் இக்கழகம் முன்னிற்கின்றது. இக்கழகம் திரு.த.நித்தியானந்தன் அவர்களின் தலைமையில் செயலாளராக செல்வி.தெ.ரேணுகா, பொருளாளராக திருமதி. ச.பாலசுந்தரம் ஆகியோரைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

கல்லூரியின் வளர்ச்சியிலும் மாணவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதிலும் பாடசாலை நிர்வாகத்துடன் தோள் சேர்த்து பேருதவிபுரிந்து வருகின்றது. இதன் செயலாளராக திரு.மா. குணரத்தினம் அவர்களும் பொருளாளராக திரு.க.சிவசங்கர் அவர்களும் சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றனர். பாடசாலையின் வளர்ச்சியில் இச்சங்கம் காத்திரமாகச் செயற்பட்டு வருகின்றது.

**கல்விசாரா அலுவலர்கள்**

யாழ்மாவட்ட பாடசாலைகளிலே கவிநிலையில் சிறந்த கல்லூரியாக எமது கல்லூரி மிளிர்வதற்கு தமது கடமைகளுக்கும் மேலதிகமாக பணிபுரிந்து வரும் கல்விசாரா அலுவலர்களின் சிறந்த சேவையும் அவர்கள் கல்லூரியின் நிர்வாகத்திற்கு வழங்கும் ஒத்துழைப்பும் பாராட்டுக்குரியது. திரு.சோ.தபேசன், திரு.இ.சிவநாதன், திரு.அ.மகேந்திரராசா ஆகியோருடன் தொண்டு அடிப்படையில் திரு.சு.ஆறுமுகசாமி அவர்களும் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றனர்.

**நீத்தார் பெருமை**

எமது கல்லூரியின் அதிபர்களாகக் கடமையாற்றி அண்மையில் அமரர்களான வைத்தீஸ்வரசர்மா, சோமசேகரம் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையினை இவ்வேளையில் நினைவு கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவும் கரங்கள்**

1. கல்லூரியின் நலன் விரும்பிகள் திரு.சோமநாதன் குடும்பத்தினர் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்காக ரூபா 50,000 இனை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.
2. ஆரம்பப்பிரிவு கால்கோள் விழாவிற்கான செலவு ரூபா 10,000ஐ சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி அன்பளிப்புச் செய்துள்ளது.
3. எமது கல்லூரியின் தொண்டராசிரியர் ஒருவருக்கு மாதாந்தம் 2500 ரூபாவை லண்டனில் வசிக்கும் திருமதி மகேஸ்வரி பரமஞானம் வழங்கி வருகின்றார்.
4. எமது கல்லூரியின் பழைய மாணவரும் கனடா பழைய மாணவர் சங்க தலைவருமான திரு.சு.குமாரசாமி 10,000 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.
5. ஐடியல் கல்வி நிறுவன ஆசிரியரும் பழைய மாணவருமான திரு.குகதாசன் அவர்களால் ரூபா 2000 அன்பளிப்பு செய்யப்பட்டது.
6. யாழ் மாவட்ட மக்கள் வங்கி உதவி முகாமையாளர் திரு.நா. நாகேஸ்வரன் அவர்களால் கரப்பந்தாட்ட அணியினருக்கான சீருடைச் செலவான ரூபா 18,200 அன்பளிப்பு செய்யப்பட்டது.
7. எமது கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை பொறுப்பாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களால் கல்லூரிக்குத் தேவையான தும்புத்தடி, விளக்குமாறு என்பனவும் பிளாஸ்ரிக் வாளிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
8. கனடா வாசியான திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கற்றல் ஆர்வம் உடைய ஆறு மாணவர்களுக்கு மாதாந்தம் 600 ரூபாய்படி (ரூபா43200) அன்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது.
9. கனடா வாசியான திரு.ஜெயப்பிரகாஷ் அவர்கள் தேசிய மட்டத்தில் நடைபெற்ற Milo cup வலைப்பந்தாட்ட போட்டியில் 3ம் இடத்தைப் பெற்ற வீராங்கனைகளுக்கும் பயிற்றுனருக்கும் ரூபா 7,000 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
10. எமது ஸ்தாபகரின் குடும்பத்தினரால் பரிசளிப்பு நிதியாக ரூபா 50,000 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கல்லூரியின் பழைய மாணவன் திரு.த.குவேந்திரன் (Sales Manager Union Assurance) பரிசளிப்பு நிதிக்காக ரூபா 5000/- அன்பளிப்பாக வழங்கினார்.
12. முன்னாள் ஆசிரியை திருமதி.சுபத்திரா உதயகுமார் அவர்கள் பரிசளிப்பு நிதியாக ரூபா 5000 அன்பளிப்பாக வழங்கினார்.
13. முன்னாள் பிரதி அதிபர் திருமதி.ச.ஸ்ரீகாந்தன் அவர்கள் பரிசளிப்பு நிதியாக ரூபா 3000 அன்பளிப்பாக வழங்கினார்.

**கல்லூரியின் தேவைகள்**

இணைப்பாடவிதான ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தேவைக்கு மேலதிகமாக நிர்வாகக் கடமைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இன்றைய சூழலில் நிர்வாக அலுவலகத் தேவைகளை நிறைவு செய்ய முகாமைத்துவ உதவியாளர்கள் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகின்றார்கள்.

- ❖ மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு றோணியோ இயந்திரம் ஒன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது.
- ❖ ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளுக்கு அலுமாரிகள் தேவைப் படுகின்றன.
- ❖ நிரந்தரமான நூலகக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
- ❖ அழகியல் தொழில்நுட்ப பாடங்களை கற்பிப்பதற்கு உரிய அறைகள் தேவைப்படுகின்றன.
- ❖ வகுப்பறைப் பற்றாக்குறை காரணமாக தற்கால கல்விச் சீரமைப்புகளுக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை
- ❖ கலைத்திட்ட, இணைப்பாடவிதானங்களில் சாதனை படைத்து வரும் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கு என ஒரு வாகனம் தேவைப்படுகின்றது.
- ❖ 2004 ம் ஆண்டு கீழ்த்தள வேலைகள் முடிக்கப்பட்ட மேல்மாடி 110x30 அடி கட்டி முடிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

தரமான சமூகத்திற்காக தரமான கல்வியை வழங்கும் நோக்கோடு செயற்படும் எமக்கு பல்வேறு வழிகளிலும் துணை நிற்கும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் எமது கல்லூரியின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு எமக்கு உதவும் மாகாணக் கல்வி பணிப்பாளருக்கும், எமது கல்லூரியின் வளரச்சியின் பால் உற்ற துணைநிற்கும் எமது வலயக்கல்விப் பணிப்பாளர், ஏனைய அதிகாரிகள் எமது கல்விக்கோட்டப் பணிப்பாளர், ஆகியோருக்கு நன்றி கூறுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் செயற்பாடுகளில் தோளோடு தோள் நின்று உதவிவரும் பிரதிஅதிபர் திரு.இ.ஆனந்தநடராசா பிரிவுத்தலைவர் களான திரு.க.சிவசங்கர், திருமதி.ச.சிவானந்தன், திருமதி. ந.நாகேஸ்வரன், திரு.க.ஸ்ரீநந்தகோபன் ஆகியோருக்கும் மற்றும் அன்புக்குரிய ஆசிரியர்களுக்கும், கல்வி சாரா ஊழியர்களுக்கும், பாசத்துக்குரிய மாணவமணிகளுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள்.

இன்றைய விழாவில் பிரதம விருந்தினர் மற்றும் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டவர்களுக்கும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்த பேராசிரியரின் துணைவியாருக்கும், நினைவுப்பேருரை ஆற்றிய விரிவுரையாளருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்த இப் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், எமது கோட்டப் பாடசாலையின் அதிபர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அபிவிருத்தி சங்க உறுப்பினரகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிச் சமூகத்தின் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து இவ் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர் விபரம் - 2010

## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**தரம் -01**

| | | |
|---|---|---|
| 1. | பு.கஜானன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 2. | பு.தனுக்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 3. | கே.பிறையழகன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 4. | பி.நேருஜா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 5. | சு.ஜதீசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 6. | ஜெ.தவேதன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 7. | பூ.கனிஸ்ரா | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 8. | ச.நிரோஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 9. | சா.அபினா | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 10. | சூ.கில்டன் | கணிதம், சமயம் |
| 11. | சு.கெல்வின் மொறிஸ் | கணிதம், சுற்றாடல் |
| 12. | ஸ்ரீ.துளசிகன் | தமிழ், சமயம் |
| 13. | ர.மிலக்சனா | தமிழ், கணிதம் |
| 14. | த.கஜரூபன் | தமிழ், கணிதம் |
| 15. | சி.ஜக்சிகன் | தமிழ், கணிதம் |
| 16. | ப.டிருசன் | தமிழ் |
| 17. | ஜே.சரண்ஜா | தமிழ் |
| 18. | ஜெ.றொஸ்வினி | தமிழ் |
| 19. | ர.சிந்துஜா | தமிழ் |
| 20. | சி.சிந்துஜன் | கணிதம் |
| 21. | உ.சிந்துஜன் | கணிதம் |
| 22. | அ.மேகவர்ணன் | கணிதம் |
| 23. | வி.தாரகன் | கணிதம் |

**தரம் -02**

| | | |
|---|---|---|
| 1. | பு.யூலியாள் | கிறிஸ்தவம், தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 2. | ஆ.பிரதிப் | சமயம்,கணிதம் |
| 3. | சி.அனோசிகன் | சமயம், தமிழ், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. க.யானுகா — சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் பொதுத்தேர்ச்சி
5. சி.துவாரகன் — சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத் தேர்ச்சி
6. ஜெ.திலக்ஷி — தமிழ், கணிதம்
7. உ.யுவானி — தமிழ், கணிதம்
8. ர.லன்சிகா — கணிதம் சுற்றாடல்
9. ஈ.மதுஷனா — கணிதம்
10. அ.சாருஜன் — கணிதம்
11. சி.குகப்பிரியன் — கணிதம் சுற்றாடல்
12. இ.ரட்சாயினி — சமயம் கணிதம்
13. பு.நிலக்ஷன் — கணிதம்
14. க,லக்சனா — கணிதம்

**தரம் -03**

1. ஜெ. நிக்ஷன் — சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி
2. த.டிஷானி — கணிதம், ஆங்கிலம், சமயம், பொதுத்தேர்ச்சி
3. சி.சாருகான் — சமயம்
4. இ.சாருகன் — சமயம்
5. சி.லோஜன் — சமயம்,தமிழ்
6. ர.பிதுர்சனா — சமயம்
7. டே.துஷாரா — தமிழ், சுற்றாடல்
8. வே.யதுஷன் — சுற்றாடல், ஆங்கிலம்
9. ஜெ.அருட்பிரகாஸ் — ஆங்கிலம்
10. அ.ஜெரின்மரியா — கிறீஸ்தவம்

**தரம் - 04**

1. ர.நிருபனா — தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், பொதுத்தேர்ச்சி
2. பா.றொபின்சன் — கணிதம், ஆங்கிலம்
3. சூ.அபிசன் — சுற்றாடல், ஆங்கிலம்
4. த.தேவதனுசியா — தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5. | ர.லினுஜன் | கணிதம் |
| 6. | நி.பானுஷா | சுற்றாடல் |
| 7. | தே.பொபின்சன் | கிறீஸ்தவம் |
| 8. | சி.நிவேதா | சமயம் |
| 9. | து.துஷாந்தி | சமயம் |
| 10. | சி.றெக்ஷிகா | தமிழ் |

**தரம் - 05**

| | | |
|---|---|---|
| 1. | சி.பானுஜா | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், பொதுத்தேர்ச்சி |
| 2. | ர.அகிலா | கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| 3. | வ.டிலானி | தமிழ், சமயம் |
| 4. | க.சர்மினி | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 5. | அ.நவோமியா | ஆங்கிலம், றோமன்கத்தோலிக்கம் |

**தரம் - 06**

| | | |
|---|---|---|
| 1. | க.அபர்ணா | தமிழ், சமயம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், குடியுரிமை, நடனம், பொதுத்தேர்ச்சி |
| 2. | ர.கிருத்திகா | கணிதம், சங்கீதம் |
| 3. | நா.சகிந்தா | புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 4. | த.சுபாஜினி | தொழில்நுட்பம் |
| 5. | அ.அதுஜன் | கிறீஸ்தவம் |
| 6. | ர.விதுஷியா | சித்திரம் |
| 7. | கி.டனுலக்ஷன் | நாடகமும் அரங்கியலும் |

**தரம் - 07**

| | | |
|---|---|---|
| 1. | த.பேணுதர்சிகா | தமிழ், வரலாறு, குடியுரிமை, சமயம், |
| 2. | வெ.மேனுஜா | கணிதம், |
| 3. | வ.டிலக்சன் | விஞ்ஞானம், |
| 4. | ஞா.விதுர்ஷியா | ஆங்கிலம், தொழில்நுட்பம், பொதுத்தேர்ச்சி, சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 5. | ச.சஞ்சீபன் | புவியியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 6. த.புருசோத்தமன் | நாடகமும் அரங்கியலும் |
| 7. ஜெ.சிவந்துஜன் | நாடகமும் அரங்கியலும் |
| 8. க.தர்ஷன் | சித்திரம் |
| 9. வி.பானுஷா | கிறீஸ்தவம் |
| 10. சி.கீர்த்தனா | சங்கீதம் |
| 11. ச. வினோஜா | நடனம் |

**தரம் - 08**

| | |
|---|---|
| 1. ம.நிவேனிகா | விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், புவியியல் தொழில்நுட்பம், பொதுத்தேர்ச்சி, சங்கீதம் |
| 2. ச.நிலானி | சமயம், தமிழ், வரலாறு, |
| 3. ச.சசிதரன் | கணிதம் |
| 4. ப.பவிதா | குடியுரிமை |
| 5. இ.பதுசன் | சித்திரம் |
| 6. ப.அஜித்குமார் | கிறீஸ்தவம் |
| 7. இ.நிருஜன் | நாடகமும் அரங்கியலும் |
| 8. பா.டான்சிகா | நடனம் |

**தரம் 09**

| | |
|---|---|
| 1. இ.லாவண்யா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், நடனம், பொதுத்தேர்ச்சி |
| 2. ச.சிந்துஜா | விஞ்ஞானம், நடனம், வரலாறு, தொழில்நுட்பம், |
| 3. ச.சரண்யா | குடியுரிமை |
| 4. அ.அகல்ஜன் | கிறீஸ்தவம் |
| 5. அ.விஜிதா | சங்கீதம் |
| 6. இ.லக்ஷி | நாடகமும் அரங்கியலும், |
| 7. ச.கிரிசாந் | சித்திரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 10**

| | | |
|---|---|---|
| 1. | க.சுகிதரன் | விஞ்ஞானம், வரலாறு, வணிகக்கல்வி, நாடகமும் அரங்கியலும், தகவல் தொழில்நுட்பம், பொதுத்தேர்ச்சி |
| 2. | அ.பிருந்தா | சமயம், தமிழ் |
| 3. | ஜெ.ஹரிதாஸ் | கணிதம் |
| 4. | வீ.குணபரன் | குடியுரிமை, ஆங்கிலம் |
| 5. | ம.குகேந்திரன் | புவியியல் |
| 6. | சி.துஷாரதன் | சித்திரம் |
| 7. | செ.மேவின்ராஜ் | கிறீஸ்தவம், சுகாதாரமும் உடற்கல்வியும், |
| 8. | இ.கீர்த்திகா | சங்கீதம் |
| 9. | ச.மோகனராசா | சுகாதாரமும் உடற்கல்வியும், |
| 10. | இ.லக்சாந்தி | நடனம் |
| 11. | சி.கொலன்சிகா | நடனம் |
| 12. | சி.அருள்ராஜ் | விவசாயம் |
| 13. | அ.சயித்தா | மனையியல் |

**தரம் 11**

| | | |
|---|---|---|
| 1. | வி.சர்மிளி | தமிழ், சமயம், ஆங்கிலம், சங்கீதம், சுகாதாரமும் உடற்கல்வியும், |
| 2. | யோ.எழிலன் | விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம், நாடகமும் அரங்கியலும், பொதுத்தேர்ச்சி |
| 3. | நா.கயேந்தினி | வரலாறு, தகவல் தொழில்நுட்பம் |
| 4. | நா.பிரசாந்தினி | குடியுரிமை |
| 5. | ப.ஜெனித்தா | நடனம் |
| 6. | அ.றம்யா | மனைப்பொருளியல் |
| 7. | றா.அஸ்வினி | சித்திரம், புவியியல் |
| 8. | பி.அனிஸ்ரன் | கிறீஸ்தவம் |
| 9. | சு.பால்ராஜ் | விவசாயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 12 (கலைப்பிரிவு)**

| | | |
|---|---|---|
| 1. | கா.ஜெயரூபினி | தமிழ், சங்கீதம், புவியியல் பொதுத்தேர்ச்சி |
| 2. | கெ.கிரிசாந் | நாடகமும் அரங்கியலும் |
| 3. | கெ.ஆன் டொலினா | அரசியல், ஆங்கிலம், பொதுத்தகவல் தொழில்நுட்பம் |
| 4. | க.தர்மினி | நடனம், மனைப்பொருளியல் |
| 5. | ந.புரந்தகன் | பொருளியல் |
| 6. | தே.சுபாசினி | இந்துநாகரிகம் |

**தரம் 12 (வர்த்தகம்)**

| | | |
|---|---|---|
| 1. | ச.பிரதாப் | கணக்கீடு |
| 2. | இ.கிரிஜா | வணிகக்கல்வி, பொதுத்தேர்ச்சி |

**தரம் 13 (வர்த்தகம்)**

| | | |
|---|---|---|
| 1. | ந.அகல்யா | வணிகக்கல்வி, கணக்கீடு, பொதுத்தேர்ச்சி |
| 2. | தே.சுதர்சினி | ஆங்கிலம் |
| 3. | ர.றஜிந்தா | பொருளியல் |

**தரம் 13 (கலை)**

| | | |
|---|---|---|
| 1. | ந.துஷாந்தி | புவியியல், சங்கீதம், பொதுத்தேர்ச்சி |
| 2. | நி.தர்சினி | தமிழ், நாடகமும் அரங்கியலும் |
| 3. | க.சோபிகா | அரசியல் |
| 4. | தே.சுதாகரன் | இந்துநாகரிகம் |
| 5. | ந.மிதுனன் | சித்திரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்பரீட்சையில் சித்தியடைந்தோர்

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2010

1. செல்வி.அகிலா ரவிதாஸ் (157 புள்ளிகள்)
2. செல்வி.பானுஜா சிறீதரன் (155 புள்ளிகள்)
3. செல்வி.சர்மினி கமலவண்ணன் (154 புள்ளிகள்)
4. செல்வி.டிலானி வசந்தன் (153 புள்ளிகள்)
5. செல்வி.வதுசனா இராஜேஸ்வரன் (149 புள்ளிகள்)
6. செல்வி.தங்கவேல் சங்கவி (148 புள்ளிகள்)
7. செல்வன்.குணசேகரன் துவாரகன் (147 புள்ளிகள்)
8. செல்வன்.சிவாயநம கயூரன் (147 புள்ளிகள்)
9. செல்வி.நவோமியா அருட்குமார் (145 புள்ளிகள்)
10. செல்வன் பகீரதன் ஜெரோன் (143 புள்ளிகள்)

## க.பொ.த (சா/த) பரீட்சை - 2009

| | | | | |
|---|---|---|---|---|
| 01. செல்வி.சர்மிளி விக்கினராசா | 9A | | | |
| 02. செல்வி.யுலக்சினி கிருஸ்ணமூர்த்தி | 9A | | | |
| 03. செல்வன்.யோகேந்திரன் எழிலன் | 7A | 2B | | |
| 04. செல்வி.கஜேந்தினி நாகராசா | 7A | B | C | |
| 05. செல்வன்.அப்புக்குட்டி சோதிராஜா | 5A | 3B | | |
| 06. செல்வி. தனுசா இராஜரட்டணம் | 4A | 3B | 2C | |
| 07. செல்வன் சண்முகலிங்கம் சயோறன் | 4A | 3B | C | S |
| 08. செல்வி. விதுசா தயாகரன் | 4A | 3B | 2C | |
| 09. செல்வி. தர்சிகா நவரத்தினராசா | 3A | 4B | C | S |
| 10. செல்வி. சுகன்யா டலிக்குமார் | 4A | B | 3C | S |
| 11. செல்வன் லோகராஜன் கமில்டன் | 3A | 3B | 3C | |
| 12.செல்வன் தர்மகுலராஜா தர்மதனிதவன் | 3A | 2B | 3C | S |
| 13.செல்வன் மகேஸ்வரன் டினோசன் | 3A | 2B | 3C | |
| 14.செல்வன் மனோகரன் விதுனன் | 3A | 3B | 2C | S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த (உ/த) பரீட்சை – 2009

### பல்கலைக்கழக அனுமதி

| | | | |
|---|---|---|---|
| 1. செல்வி. ஜீவனா சின்னராசா | A, | B, | C |
| 2. செல்வி. கர்சிகா செல்வராசா | A, | B, | C |
| 3. செல்வி. கௌதமி பத்மநாதன் | A, | B, | S |
| 4. செல்வி. தோகினி கனகலிங்கம் | B, | 2C | |
| 5. செல்வி. பானுஜா சிவகுருநாதன் | B, | 2S | |

## வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டி - 2010

**தமிழ்த்தினப்போட்டி**

**1) இசைக்குழு பிரிவு 1** **வலயம் 2ம் இடம்**

1. அ.விஜிதா
2. செ.பிரசாந்தினி
3. பா.சிவகாமசுந்தரி
4. இ.சுவேனிகா
5. சி.றொசானி
6. கெ.கிரிசாளினி
7. கு.காயத்திரி
8. ப.அஜித்குமார்
9. இ.செல்வரதன்
10. ந.கபில்ராஜ்

**2) விவாதம் (திறந்த போட்டி)** **வலயம் 2ம் இடம்**

1. ம.கார்த்திகா
2. யோ.கமில்டன்
3. இ.சுபீஷன்

**3) சிந்து நடைக்கூத்து** **வலயம் 2ம் இடம்**

1. ட.சிந்துஜா
2. ம.கார்த்திகா
3. அ.சபீனா
4. நா.ஜெயந்தினி
5. செ.ஜெயதர்சினி
6. ஜெ.தமஸ்வினி
7. க.தர்மிகா
8. சி.ஈழத்தரசி
9. சி.கினிசா
10. ந.தர்சனா
11. ட.சுகன்ஜா
12. ச.சஞ்சீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4) சமூக விஞ்ஞானப் போட்டி**

தரம் 6 க.அபர்ணா வலயம் 1ம், மாகாணம் 2ம் இடம்

**5) கணித புதிர் போட்டி**

தரம் 8 ம.நிவேனிகா வல்யம் 2ம் இடம்

**6) விஞ்ஞான வினாடிவினாப் போட்டி**

தரம் 6 க.அபர்ணா வலயம் 1ம் இடம்

நா.சகிந்தா வலயம் 2ம் இடம்

தரம் 11 கி.யுலக்ஷினி வலயம் 1ம் இடம்

**7) துரித கணிதச் செய்கை**

தரம் 3 த.டிசானி வலயம் 1ம் இடம், மாகாணம்- 1ம் இடம்

**8) மனை பொருளியல் அறிவுப் போட்டி**

தரம் 12 க.தர்மினி வலயம் 1ம் இடம்

**9) சதுரங்கப் போட்டி ( HNB அனுசரனையுடன் நடாத்தப்பட்டது )**

under 9 ர.லினுஜன் வலயம் 1st place மாவட்டம் 1st place

**10) English Day Competition**

**Junior Drama** — **Zonal Level, 3rd place**

1. K.Danusan
2. K.Gokuluxon
3. R.Pathusan
4. I.Selvarathan
5. B.Dansika
6. M.Sinthuja
7. M.Nivenika
8. J.Geerthana
9. S.Nilani
10. K.Dilkki
11. V.Thulasika
12. S.Pavitha

**Copy writing**

**1.** K.Nitharsika — Zonal Level, 2nd place



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Role play | Zonal Level, 2nd place |
|---|---|
| 1. T.Lipika | 2. K.Lavanya |
| 3. M.Saluja | 4. K.Kayaththiri |
| 5. S.Sinthuja | 6. E.Luxsy |

**11) சித்திரப் போட்டி**

| | |
|---|---|
| இ.பதுசன் | வலயம் - 3ம் இடம் |

**12) கல்வியமைச்சு நடத்திய "உலகை வெற்றி கொள்ளும் பிள்ளைகள்" சித்திரப் போட்டி**

| | | |
|---|---|---|
| தரம் 1, 2 பிரிவு 1 | ஜெ.றொஸ்வினி | மாவட்டம் 1ம் இடம் |
| | கி.சுதர்ஜன் | மாவட்டம் 3ம் இடம் |
| தரம் 4, 5 பிரிவு 2 | கு.லோகிதன் | மாவட்டம் 1ம் இடம் |
| | கு.துவாரகன் | மாவட்டம் 2ம் இடம் |
| | இ.கோபிசன் | மாவட்டம் 3ம் இடம் |

**13) யாழ் மாவட்ட சிவில் நிர்வாகத்தினரால் நடாத்தப்பட்ட "டெங்கு விழிப்புணர்வு" சித்திரப் போட்டி**

| | |
|---|---|
| நா.சபேஷ் | மாவட்டம் 1ம் இடம் |

**14) அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் - பொன் விழாச் சைவ மாநாடு**

1. சைவசித்தாந்த வினாடி வினாப் போட்டி

| | |
|---|---|
| செல்வி.வி.சர்மிளி | மாவட்டம் 1ம் இடம் |

2. புராண படனப் போட்டி

| | |
|---|---|
| செல்வன்.ம.டினேசன் | மாவட்டம் 2ம் இடம் |
| செல்வன். லோ.கமில்டன் | மாவட்டம் 2ம் இடம் |

**15. இந்து கலாசாரஅமைச்சினால் நடாத்தப்பட்ட அறநெறி சைவசமயப் பரீட்சைப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1. தரம் 2 | க.ஜானுசா | தேசிய மட்டம் |
| 2. தரம் 5 | இ.வதுசனா | மாவட்டம் |
| 3. தரம் 5 | சி.கயூரன் | மாவட்டம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16) சிறந்த சாரணர்**

1. செல்வன்.கு.திருறங்கன்

**17) பேடன் பவல் தினப்போட்டி**

**குருளைச்சாரணர்**

1) புதிர் போட்டி

பிரிவு 1

செல்வி.அ.நவோமியா மாவட்டம் 2ம் இடம்
மாகாணம் 2ம் இடம்

2) கட்டுரைப் போட்டி

பிரிவு 1

செல்வி.வ.டிலானி மாவட்டம் 3ம் இடம்
மாகாணம் 3ம் இடம்

3) விளையாட்டுப் போட்டி

சமநிலை ஓட்டம்

பிரிவு 1

செல்வி.சு.கிரிஜா மாவட்டம் 1ம் இடம்
செல்வி.கி.துஷாந்தி மாவட்டம் 2ம் இடம்

பிரிவு 2

செல்வி.அ.நவோமியா மாவட்டம் 1ம் இடம்

**75M ஓட்டம்**

பிரிவு 2 செல்வி.வ.டிலானி மாவட்டம் 1ம் இடம்

**நின்று நீளம் பாய்தல்**

பிரிவு 2 செல்வி.வ.டிலானி மாவட்டம் 2ம் இடம்

**பந்தெறிதல்**

பிரிவு 2 செல்வி. பா. தர்சிகா மாவட்டம் 3ம் இடம்

**சாரணர்**

1) புதிர் போட்டி

பிரிவு 1செல்வன்.சு.துஷாரதன் மாவட்டம் 3ம் இடம்
பிரிவு 2 செல்வன்.கு.திருரங்கன் மாவட்டம் 1ம் இடம்
மாகாணம் 3ம் இடம்
செல்வன்.சி.குகதாஸ் மாவட்டம் 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்கள் - 2010

## வலைப்பந்தாட்டம் UNDER – 15

| | |
|---|---|
| கோட்டமட்டம் | 1ம் இடம் |
| வலயமட்டம் | 1ம் இடம் |
| மாவட்டம் | 2ம் இடம் |
| மாகாணம் | 3ம் இடம் |

1. செல்வி.பிரதீபா தவகுலசிங்கம்
2. செல்வி.சங்கீதா தவகுலசிங்கம்
3. செல்வி.சோபிசா இராஜேந்திரம்
4. செல்வி.பிரணவி நகுலேஸ்வரன்
5. செல்வி.சிந்துஜா மகெந்திரகுமார்
6. செல்வி.மேனுசா தயாவரன்
7. செல்வி.தர்சிகா திருக்குமார்
8. செல்வி.கனுஸ்ரிகா ராம்தாஸ்
9. செல்வி.அபிராமி சிறீஸ்கந்தராஜ்
10. செல்வி.சிந்துஜா சுகுமார்
11. செல்வி.கோபினா சூரியகுமார்
12. செல்வி.பிரசாந்தினி செல்வம்
13. செல்வி.லக்ஷி இளங்கோ

## வலைப்பந்தாட்டம் UNDER - 17

| | |
|---|---|
| கோட்டமட்டம் | 1ம் இடம் |
| வலயமட்டம் | 2ம் இடம் |
| மாவட்டம் | 2ம் இடம் |
| மாகாணம் | 2ம் இடம் |

1. செல்வி.விதுஷா தயாகரன்
2. செல்வி.அலெக்ஸ்சனா ரவிதரன்
3. செல்வி.ஜெனித்தா தங்கவேல்
4. செல்வி.தர்சிகா நவரத்தினராசா
5. செல்வி.சுகன்ஜா சங்கர்
6. செல்வி.டல்சியா மகேந்திரம்
7. செல்வி.தாட்சாயினி யோகராசா
8. செல்வி.தர்சனா தவகுலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. செல்வி.தர்சிகா சசிகரன்
10. செல்வி.சர்மினி விஜயகுலசிங்கம்

**கரப்பந்து UNDER - 15**

**(ஆண்கள்)**

கோட்ட மட்டம் 1ம் இடம் வலயமட்டம் 2ம் இடம்

மாவட்டமட்டம் 3ம் இடம் மாகாணமட்டம் 2ம் இடம்

1. செல்வன்.ஜெயருபன் ஹரிதாஸ்
2. செல்வன்.குணதாசன் கபில்தாஸ்
3. செல்வன்.திசைநாதன் சாரங்கன்
4. செல்வன்.நற்குணராசா சாருஜன்
5. செல்வன்.இராஜரட்ணம் கபிலன்
6. செல்வன்.நவரத்தினராசா பவதர்சன்
7. செல்வன்.தவனேசன் திபின்சன்
8. செல்வன்.தங்கவேலு தனுசியன்
9. செல்வன்.நடராசா அஜிந்தன்
10. செல்வன்.அரிகரிராஜா நிரோஜன்
11. செல்வன்.பாஸ்கரன் மதுசன்
12. செல்வன்.சுப்பிரமணியம் சுதன்

**சதுரங்கப் போட்டி**

வயதுப்பிரிவு 19 (குழு) வலயமட்டம் 3ம் இடம் (பெண்கள்)

1. செல்வி.சோபிகா கனகலிங்கராசா
2. செல்வி.சுதர்சினி தேவதாசன்
3. செல்வி.தர்சினி நித்தியானந்தம்
4. செல்வி.கஜேந்தினி நாகராசா
5. செல்வி.சர்மிளி விக்னராஜா
6. செல்வி.ஜெனித்தா தங்கவேலு
7. செல்வி.தனுஷா இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப்பரிசில்கள்

1. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை
செல்வி.அகிலா ரவிதாஸ்
அமரர் காயத்திரிதாஸன் சாருகாயன் நினைவாக வழங்குபவர் திரு.வ.ஸ்ரீகாந்தன்

2. க.பொ.த (சா/த) பரீட்சை
செல்வி.சர்மிளி விக்கினராசா 9A
அமரர் ந.குருசாமி நினைவாக வழங்குபவர் திரு.கு.விமலன்
செல்வி.யுலக்சினி கிருஸ்ணமூர்த்தி 9A
அமரர் ஆ.இளையதம்பி நினைவாக வழங்குபவர் திரு.இ.ஆனந்தநடராசா

3. க.பொ.த (உ/த) பரீட்சை
செல்வி. ஜீவனா சின்னராசா A, B, C
அமரர் சி.வரதராஜசர்மா நினைவாக வழங்குபவர் திரு.வ.ஸ்ரீகாந்தன்

4. சிறந்த கரப்பந்தாட்ட வீரர்
செல்வன்.ஜெ.ஹரிதாஸ்
அமரர் சு.குமாரசுவாமி நினைவாக வழங்குபவர் திரு.கு.விமலன்
செல்வன்.ந.திலோஜன்
அமரர் ச.கந்தசாமி நினைவாக வழங்குபவர் திரு.க.சிவசங்கர்
செல்வன்.இ.விதுசன்
அமரர் சு.வடிவேல் நினைவாக வழங்குபவர் திரு.வ.துவாரகன்

5. சிறந்த கரப்பந்தாட்ட வீராங்கனை
செல்வி. வி.றகீதா
அமரர் சு.திருநாவுக்கரசு நினைவாக வழங்குபவர் திருமதி.ச.சிவானந்தன்
செல்வி.த.சங்கீதா
அமரர் மா.செல்வராணி நினைவாக வழங்குபவர் திரு.ந.தர்மிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **சிறந்த மெய்வல்லுநர் வீரர்**

செல்வன் க.வினோத்

அமரர் சங்கரப்பிள்ளை நினைவாக வழங்குபவர்

திருமதி.ச.சிறீகாந்தன்

7. **சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனை**

செல்வி.த.சங்கீதா

அமரர் ஆ.சின்னையா நினைவாக வழங்குபவர் செல்வி.சி.வசந்தி

8. **சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனைகள்**

1. செல்வி.த.பிரதீபா
   அமரர்க.சிவஞானம் நினைவாக வழங்குபவர் திரு.க.சிவசங்கர்
2. செல்வி.த.ஜெனித்தா
   அமரர் செல்லையா நினைவாக வழங்குபவர்
   செல்வி.செ.செல்வராணி

9. **சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்**

செல்வன்.க.கோபிலவன்

அமரர் ந.கணேசராசா நினைவாக வழங்குபவர் திரு.க.நிர்மலகஜன்

10. **சிறந்த சதுரங்க வீராங்கனை**

செல்வி.நா.கஜேந்தினி

அமரர் தி.குகராஜன் நினைவாக வழங்குபவர் செல்வி.கு.விமலினி

11. **சிறந்த சதுரங்க வீரர்**

செல்வன். ஜெ.ஹரிதாஸ்

அமரர் சி.ஜெயந்தி நினைவாக வழங்குபவர் திரு.சி.புவிராஜ்

12. **சிறந்த சாரணர்**

செல்வன்.கு.திருரங்கன்

அமரர் க.தர்மராசா நினைவாக வழங்குபவர் திரு.த.அருளரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அறநெறி சைவசமய பரீட்சை
செல்வி.க.ஜானுகா
அமரர் சி.பரம்தேவராஜா நினைவாக வழங்குபவர்
திருமதி.ச.பாலசுந்தரம்

14. சிறந்த கட்டுரையாளர்.
செல்வி.ந.துஷாந்தி
அமரர் மா.நடராசா நினைவாக வழங்குபவர் திரு.ந.தனுசுஜன்

15. சிறந்த பேச்சாளர்
செல்வன்.லோ.கமில்டன்
அமரர் ந.கமலாவதி நினைவாக வழங்குபவர் திரு.ந.குகபரன்

16. சிறந்த உதைபந்தாட்ட வீரர்
செல்வன். இ.பிரசாந்
அமரர் இ.தம்பிராசா நினைவாக வழங்குபவர்
திரு.த.சிவசுப்பிரமணியம்

17. கணித வினாடி வினா
செல்வி.ம.நிவேனிகா
அமரர் இ.இராசையா நினைவாக வழங்குபவர்
திருமதி.வ.பத்மநாதன்

18. விஞ்ஞான வினாடி வினா
செல்வி.கி.யுலக்சினி
அமரர் அ.சிறீகாந்தன் நினைவாக வழங்குபவர்
திருமதி.ச.சிறீகாந்தன்
செல்வி.க.அபர்ணா
அமரர் சு.சிவவாகீதர் நினைவாக வழங்குபவர்
திருமதி.த.சிறீரங்கநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. **சமூக விஞ்ஞான வினாடி வினா**
செல்வி.க.அபர்ணா
அமரர் கலாபூசணம் V.N. செல்வராசா நினைவாக வழங்குபவர்
திருமதி.ய.ஸ்ரீகுமரன்

20. **சிறந்த ஓவியர்**
செல்வி. ஜெ.றொஸ்வினி
அமரர் மு.பரராஜசிங்கம் நினைவாக வழங்குபவர்
திருமதி.ம.இளமுருகன்
செல்வன்.கு.லோகிதன்
அமரர் சி.இளையதம்பி நினைவாக வழங்குபவர்
திருமதி.பு.இராசலிங்கம்

21. **மனைப்பொருளியல் அறிவுப்போட்டி**
செல்வி.க.தர்மினி
அமரர் ந.கணேசராசா நினைவாக வழங்குபவர்
திருமதி.வி.கணேசராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PERMANENT STAFF - 2011

1. Mr.G.vimalan Principal MED, SLPS 2 - II
2. Mr.E.Anandanadarasa Duputy Pri M.A. Dip in Edu, SLTS - 1
3. Mrs.S.Sivananthan Teacher G.C.E (A/L ) Social ( Trained ),SLTS - 1
4. Mrs.N.Nageswaran Teacher Science ( Trained ) SLTS 2 - I
5. Mrs.S.Nagarajah Teacher B.A. Dip. in Edu. SLTS 1
6. Mrs.S.Jeyarajan Teacher B.A Li. skill (Trained) SLTS 2 - I
7. Mrs.M.P.A.Ponkalan Teacher Home science ( Trained ) SLTS 2 - I
8. Mrs.H.Shanthakumar Teacher B.A (Hons) Dip. in Edu. SLTS 2 - II
9. Mrs.S.Balasudaram Teacher Hinduism ( Trained) SLTS 2 - II
10. Mr.K.Sivashankar Teacher B.A. Dip. in Edu, Science (Trained)SLTS2-II
11. Mr.K.Srinanthagoban Teacher M.A. Dip. in Edu, SLTS 2 - II
12. Mr.T.Arularasan Teacher Dip. in Edu, Special Trained (Hindusium) H.N.D.A, SLTS 2 - II
13. Mrs.T.Jeyapalan Teacher B.A (Hons) Dip. in Edu. SLTS 2 - II
14. Mrs.A.Mugunthan Teacher Dip. in Teaching (Science), SLTS 2 - II
15. Mrs.M.Gunarajah Teacher B.A. Dip. in Edu, SLTS 1
16. Mrs.Y.Srikumaran Teacher Dip. in Music, SLTS 1
17. Mr.N.Ravivannan Teacher G.C.E (A/L ) Maths (Trained), SLTS 2 - II
18. Mrs.V.Selvakumar Teacher B.Com. (Hons) Dip. in Edu, SLTS 2 - II
19. Mr.P.Thayalan Teacher B.F.A( Special), SLTS 2 - II
20. Mr.N.Kugaparan Teacher B.A (Hons) Dip. in Edu.,SLTS 2 - II
21. Miss.B.Yamini Teacher G.C.E (A/L ) English ( Trained ) SLTS 2 – II
22. Miss.G.Vimalini Teacher B.B.A (Hons), SLTS 3 - I
23. Mrs.M.Wicknarajah Teacher B.A. Dip. in Edu, MED, Trained (Dance), SLTS 2 - I
24. Mr.N.Hariharan Teacher B.A. Dip. in Edu, Special Trained (English), SLTS 2 - II
25. Mrs.S.Maheswaran Teacher B.A. Dip. in Edu, SLTS 2 - II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. Mrs.A.M.D.Uthayakumar Teacher Dip. in Teaching, SLTS 3 - I

27. Mr.C.Suthakaran Teacher B.Com. (Hons) , SLTS 3 - I

28. Miss.T.Renuka Teacher Dip. in Teaching (English) SLTS 3 - I

29. Mr.K.Thayaparan Teacher G.C.E (A/L ) Special Trained (Sci)Dip. in Spe.Edu, SLTS 2 - II

30. Mrs.N.Piratheepan Teacher G.C.E (A/L ) Primary ( Trained ), SLTS 2 - II

31. Miss.N.Thulapamany Teacher G.C.E (A/L ) Maths ( Trained ), SLTS 2 - II

32. Miss.S.Vashanthy Teacher G.C.E (A/L ), Dip. in Spe.Edu, SLTS 3 - I

33. Mr.R.Kanna Teacher Dip. in Teaching (Phy&Health), SLTS 3 - I

34. Mrs.S.Anujeyan Teacher B.Com. Dip. in Edu, SLTS 2 - II

35. Miss.A.Lathagene Teacher G.C.E (A/L), B.A

36. Miss.S.Jasothara Teacher G.C.E (A/L), H.N.D.E

37. Mr.T.Nithiyananthan Teacher B.A, SLTS 2 - II

38. Miss.S.Selvarani Teacher B.A, Primary ( Trained ), SLTS 2 - II

39. Mrs.A,Mahendran Teacher G.C.E. (A/L) Primary ( Trained ), SLTS 2 - II

40. Mrs.P.Segarer Teacher G.C.E (A/L ) Primary ( Trained ), SLTS 2 - II

41. Mrs.M.Xavier Teacher G.C.E (A/L ). Primary ( Trained ) B.ed. Dip. in Phsy. SLTS 2 - I

42. Mrs.B.Subasri Teacher G.C.E (A/L ) Primary ( Trained ), SLTS 2 - II

43. Mrs.K.Meiappan Teacher B.A. Dip. in Edu, SLTS 1

44. Mrs.S.Ramesh Teacher B.Sc, Dip.in Edu SLTS 2 – II

45. Mr.K.Vigneswararajah Teacher G.C.E (A/L ) Agriculture (Trained),SLTS 3–I

46. Mrs.T.Yoganantham Teacher B.Com. Dip. in Edu, RC ( Trained ), SLTS I

47. Mrs.S.Jeyakumar Teacher G.C.E. (A/L) ,Primary ( Trained ), SLTS 3 – I

48. Mrs.T.Sivajogarajah Teacher B.A, SLTS 3 – I

49. Mrs.T.Sriranganathan Teacher B.Com, Dip. in Edu, SLTS 2 – II

50. Mrs.Y.Sureshkumar Teacher B.F.A( Music), SLTS 3 – I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TEMPORARY STAFF

| | | |
|---|---|---|
| 51. | Mr.N.Sathiyaruban | Teacher B.A., Special in Political Science, SLTS 3 - I |
| 52. | Mrs.K.Skantharuban | Teacher B.A (Hons), SLTS 3 - I |
| 53. | Mr.F.Kamilash | Teacher B.A , SLTS 3 – I |

## கல்விசாரா ஊழியர்கள் விபரம்

01. திரு.சோ.தபேசன்

02. திரு.இ.சிவநாதன்

03. திரு.அ.மகேந்திரராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISION OF OUR SCHOOL

"Preparing the students of this school
for the present and future life"

## MISSION OF OUR SCHOOL

Providing the environment and resources, in order to make the students of our school, who are the fruits of this area, to lead them to the modern world and enable them to face the challenges thereby live victorious life

## நோக்கக்கூற்று

"கல்லூரி ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நிகழ்கால எதிர்கால வாழ்வுக்கு தயாராக்குதல்"

## செயற்கூற்று

கல்லூரி ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நவீன உலகினை நோக்கி முன்னெடுத்துச் செல்வதுடன் அதற்கான சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாக்கி வெற்றிகரமான வாழ்க்கைத்தோரணையினை பெறுவதற்கான கள, வள வசதிகளை வழங்குதல் கல்லூரியின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

போற்றுகின்றோம் போற்றுகின்றோம்
போற்றுகின்றோம் அன்னையே
ஏற்றமான வாழ்வில் எம்மை
வாழ வைக்கும் உன்னையே
போற்றுகின்றோம்.

தங்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரித் தாயே
சகலகலை உதவி எம்மை வளர்த்தெடுப்பாய் நீயே
எங்கெங்கும் புகழறிவு தந்தருளுவாயே
எங்கள் மனக்கோயிலிலே என்றுமிருப்பாயே
போற்றுகின்றோம்

செகராஜசிங்கமென்பார் சீராட்டி வளர்க்க
தேழவரும் மாணவர்க்கு பயனளித்தாய் செழிக்க
அகிலமெல்லாம் நின்னிடத்தே கற்றவர்கள் சிறக்க
அரியதுணை செய்தாயே அன்புநலம் சுரக்க
போற்றுகின்றோம்

சுகஞானம் தமிழ் கணிதம் உயிரியல் விஞ்ஞானம்
தொழுசமயம் ஆங்கிலம் சங்கீதம் புவிஞானம்
பகரும் வரலாறுடன் கைவேலை கமவேலை
பயிலோவியம் நடனம் கலைகள் கற்பித்தாயே
போற்றுகின்றோம்

கற்பகம் போல் மாணவர்க்கு கதியருள் பாற்கடலே
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் ஒளிவிளக்கு மலையே
சொற்புகழார் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
போற்றுகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org